முருகப்பெருமான் துணை

**மகான் ஞானச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.07.2023, வெள்ளிக்கிழமை

1. பூதலம் புண்ணிய உலகாக
புதுமைகளும் ஞானமாக அடைய
ஆதரவு தந்து மக்களை தேற்ற
ஆறுமுகனார் அவதாரமாக வந்த
2. வந்தநல் ஞான வள்ளலே
வரம் தரும் அரங்க மகானே
சிந்தைவைத்து உன் வழி வர
சித்தி காண்பர் மக்களெல்லாமென
3. என உன் பெருமை கூறி
இயம்புவேன் சோபகிருது மிதுன திங்கள்
ஞானம்பட இருபானீர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 22 ம் நாள், 07.07.2023, வெள்ளிக்கிழமை)
நாட்டிடுவேன் அறிவுரை ஆசி
4. ஆசிதனை ஞானச்சித்தர் யானும்
அருளுவேன் அகிலம் வளமுற
ஆசிதந்து அரங்க ஞானிகாட்டும்
அறநெறி ஆபத்தை போக்கி
5. போக்கியே ஞானவான்கள் எனும்
புண்ணியவான்களும் கூடிய
ஊக்கமான மக்கள் படையை
உலகமெல்லாம் நிரப்பி
6. நிரப்பிக் காக்கும் உயர்நெறி
நீதி தருமம் நியாயம் என
அறப்பணி நிறைந்த சமூகமாற்றம்
அமைத்து அருளும் தருமநெறி

7. நெறிகெட்டு மாயை வழி
நிம்மதி இழந்த மக்களும்
தறிக்கெட்டு தலைமை வழி
தன்னலமான அஞ்ஞானவான்களும் கூட

8. கூடவே அரங்கன் அவதார
குருவருள் பெருமை அறிந்து
நாடவே அக்கணமே மாற்றம்
ஞானவழி நல்வழியாக மாறி

9. மாறியே சூழ்ந்த மாயைகள்
மனவடக்கமிலா தீமைகளும்
மாறியே ஞானவான்களாக
மறுமலர்ச்சிக் கண்டுத் தேறி

10. தேறியே ஆறுமுக ஞானி
தெளிந்த வேதம் தேற்ற
அறிவுத் தெறிவு ஞானபலம்
அடைந்து பிறவி நோக்கம்

11. நோக்கம் உணர்ந்து சிறந்து
நிலமதனில் தரும சேவை
ஆக்கமுடன் ஆற்றி மிகுந்து
அற்புதம்பட ஞானிகள் ஆவர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—